பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 12 2025** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஓமன் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டு மன்னர் **Haitham Bin Tarik** உடன் இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

2. காப்பீடு சட்டங்கள் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

3. இந்திய உணவு விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் கருத்தரங்கம் இன்று தஞ்சாவூரில் தொடங்குகிறது.

4. தமிழகத்தில் விவசாயிகள் நலனுக்காகவும், உள்கட்டமைப்புக்காகவும் மத்திய அரசு பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

5. உலகக் கோப்பை **Roll Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா, ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஓமன் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு மன்னர் Haitham Bin Tarik உடன் இன்று இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

அத்துடன் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் பரஸ்பரம் இருதரப்பு நலன் சார்ந்த அம்சங்களையும் பரிமாறிக்கொள்கின்றனர்.

இந்தியா - ஓமன் இடையே விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் இரு தலைவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகிறது.

பின்னர் அங்கு நடைபெறும் வர்த்தக கூட்டத்திலும், இந்திய வம்சாவளியினர் இடையேயும் பிரதமர் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

காப்பீடு சட்டங்கள் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் இந்திய காப்பீட்டு நிறுவனங்களில் நேரடி அன்னிய முதலீட்டு வரம்பு 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

காப்பீட்டுத் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதையும், காப்பீடுதாரர்களின் நலனைப் பாதுகாப்பதை உறுதி செய்வதையும் இந்த மசோதா நோக்கமாக கொண்டுள்ளது.

அத்துடன் காப்பீட்டு நிறுவனங்கள் எளிதாக வர்த்தகம் செய்வதை மேம்படுத்தவும், ஒழுங்குமுறையில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவர உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவையில் நடைபெற்ற இதுகுறித்த விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், 2014ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பதவியேற்றது முதல் காப்பீட்டுத் துறையில் சிறந்த சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் உண்மையான வளர்ச்சிக்கு மக்கள், வர்த்தகம் மற்றும் வேளாண்மைக்கு பரந்த அளவிலான காப்பீடு தேவைப்படுவதாக அவர் வலியுறுத்தினார்.

ஊரகப் பகுதிகளில் சாதாரண மக்களுக்கும் காப்பீட்டை விரிவாக்கம் செய்ய அரசு உறுதிபூண்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்திய உணவு விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் கருத்தரங்கம் இன்று தஞ்சாவூரில் தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இக்கருத்தரங்கில் தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு மதிப்பு கூட்டுவது குறித்து விவசாயிகள் அறிந்துகொள்ள முடியும் என்று தஞ்சாவூர் தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில் மேம்பாடு மற்றும் மேலாண்மை நிறுவன இயக்குநர் திரு. பழனிமுத்து எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte - Palanimuthu - 40 Sec)**

<<<<>>>>

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு தினத்தையொட்டி திருநெல்வேலி -தாம்பரம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி திருநெல்வேலியில் இருந்து தாம்பரத்திற்கு இம்மாதம் 28ஆம் தேதியும், அடுத்த மாதம் 4ஆம் தேதியும் இரவு மணி 11.30க்கு ரயில் இயக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

மறுமார்கத்தில் தாம்பரத்தில் இருந்து இம்மாதம் 29ஆம் தேதியும், அடுத்த மாதம் 5ஆம் தேதியும் மாலை மணி 3.30க்கு ரயில் இயக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு இன்று காலை 8 மணிக்குத் தொடங்கும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் விவசாயிகள் நலனுக்காகவும், உள்கட்டமைப்புக்காகவும் மத்திய அரசு பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

வேலூரில் நேற்றிரவு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், திரு. நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்றது முதல் தமிழகத்திற்கு மத்திய அரசு 14 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

ஆளும் திமுக அரசு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதுபோல் வேலூரில் தோல் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் ஈர நில பறவைகள் கணக்கெடுப்பு இம்மாதம் 27 மற்றும் 28ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

20 ஈர நிலங்களில் நடத்தப்பட உள்ள இந்தப் பறவைகள் கணக்கெடுப்பில் தன்னார்வலர்கள், மாணவர்கள் ஆகியோர் பங்கேற்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Kannan - 46 Sec)**

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் அனுமதிக்கப்படாத வனப் பகுதிகளுக்குச் செல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

வனப் பகுதிகளில் ட்ரோன் கேமரா மூலம் ஒளிப்பதிவு செய்வோர் கைது செய்யப்படுவார்கள் என்று நீலகிரி வனக்கோட்ட அதிகாரிகள் எச்சரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 47 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

அமைதி ஒப்பந்தத்தில் யுக்ரைன் கையெழுத்திட மறுத்தால் ராணுவ நடவடிக்கையின் மூலம் ரஷ்யா தமது நிலத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் என்று அதிபர் திரு. விளாடிமிர் புதின் எச்சரித்துள்ளார்.

--------------

நேட்டோ நாடுகளுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு உத்தரவாதத்தை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் யுக்ரைனுக்கும் அளித்தால் தமது நாடு நேட்டோவில் உறுப்பினராக சேரும் முயற்சி கைவிடப்படும் என்று அதிபர் திரு. ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

--------------

மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், கேரளா மற்றும் அந்தமான் நிகோபாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ் கணக்கீட்டுப் படிவங்களை சமர்ப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

-------------

காற்று மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் தலைநகர் தில்லியில் மாசுக் கட்டுப்பாட்டு சான்றிதழ் இல்லாத வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது.

--------------

மதுரையில் எல்.ஐ.சி. அலுவலகத்தில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் பெண் மேலாளர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

--------------

கள்ளக்குறிச்சியில் மாவட்ட தொழில் மையம் சார்பில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையினருக்கான கடன் வழங்கும் முகாம் ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

--------------

பிரதமரின் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் தொடங்குவதற்கு 30 பயனாளிகளுக்கு கடனுதவிகளை ஆட்சியர் திரு. தினேஷ் குமார் வழங்கினார்.

--------------

திருப்பூர் மாவட்ட காவல்துறை சார்பில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர் கூட்டத்தில் 22 மனுக்கள் பெறப்பட்டது.

--------------

தேனி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குழயினருக்கான தொழில்நெறி வழிகாட்டல் குறித்த விழிப்புணர்வு முகாம் ஆட்சியர் அலுவலகத்தில் நாளை நடைபெற உள்ளது.

--------------

பிரபல நாதஸ்வர வித்வான் செம்பனார்கோவில் SRG ராஜன்னா காலமானார். அவருக்கு வயது 92.

--------------

*விளையாட்டுச் செய்தி*

உலகக் கோப்பை **Roll Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 6-2 என்ற கோல் கணக்கில் எகிப்தை வென்றது.

மகளிர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஈரானை வென்றது.

**<<<<The End>>>>**